ரூ.100 கோடி பழனி கோவில் சொத்து தனியாருக்கு பத்திரப்பதிவு!

த.வெ.க. அரசு அத்துமீறல்!

பழநி, ஜூலை 13 -

உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற உத்தரவுகளை மீறி, பழநி தண்டபாணி சுவாமிகள் மடத்துக்கு சொந்தமான ரூ.100 கோடி மதிப்பிலான 1.40 ஏக்கர் நிலம், தனிநபர்களுக்கு அண்மையில் சட்டவிரோதமாக பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ள விவகாரம் பக்தர்கள், தேவஸ்தான அதிகாரிகளை அதிர்ச்சி அடையச் செய்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் பழநி அடிவாரம் பூங்கா சாலையில் தண்டபாணி சுவாமிகள் மடத்துக்கு சொந்தமான நிலம் உள்ளது. பழநி முருகன் கோயிலுக்கு வரும் பக்தர்கள் இந்த நிலத்தில் தங்கி இளைப்பாறவும், அன்னதானம் வழங்கவும் பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்த நிலத்தின் மூலம் கிடைக்கும் வருவாய் கோயில் கட்டளைக்கு பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில், காலப்போக்கில் இந்த நிலத்தை தனியார் சிலர் ஆக்கிரமித்தனர்.

இதுதொடர்பாக, பழநி தேவஸ்தானம் சார்பில் உயர் நீதிமன்றம், உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிமன்றங்கள், தண்ட பாணி சுவாமிகள் மடத்துக்கு, பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயில் இணை ஆணையரை தக்காராக நியமித்ததுடன் இந்த நிலத்தை தேவஸ்தானத்துடன் இணைத்தும் உத்தரவிட்டன.

இதையடுத்து, தண்ட பாணி சுவாமிகள் மடத்துக்கு சொந்தமான 1.40 ஏக்கர் நிலம், தக்கார் மற்றும் பழநி கோயில் இணை ஆணையருமான மாரிமுத்து தலைமையில் 60 ஆண்டுக்கு பிறகு கடந்த 2025 செப்.12ம் தேதி மீட்கப்பட்டது. இந்த நிலத்தின் தற்போதைய மதிப்பு ரூ.100 கோடி ஆகும். தற்போது அந்த நிலத்தில் பழநி முருகன் கோயிலுக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக இலவச வாகன நிறுத்தம் அமைத்து, பயன்பாட்டில் உள்ளது.

இதற்கிடையே, பழநி இணை சார் பதிவாளர் கடந்த 2ம் தேதி பணி மாறுதலில் சென்ற நிலையில், கூடுதல் பொறுப்பாக கவனித்து வந்த மற்றொரு இணை சார் பதிவாளர் மூலம் 6ம் தேதி தண்ட பாணி சுவாமிகள் மடத்துக்கு சொந்தமான நிலம் சட்டவிரோதமாக தனிநபர்களுக்கு பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இது பக்தர்கள், தேவஸ்தான அதிகாரி கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

விவசாயிகளுக்கு மின்சார கட்டணத்தை குறைக்க வேண்டும் என்ற போராட்டத்தில்

உயிர் நீத்த விவசாயிகளின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் அரசு வேலை வழங்க வேண்டும்!

கொங்குநாடு மக்கள் தேசிய கட்சித் தலைவர் இ.ஆர்.ஈஸ்வரன் அறிக்கை!

சென்னை, ஜூலை 13-

கொங்குநாடு மக்கள் தேசிய கட்சித் தலைவர் இ.ஆர்.ஈஸ்வரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

விவசாயத்திற் கான மின் கட்டணம் ஏற்றப்பட்டதை குறைக்க வேண்டும் என்று தமிழ்நாடு முழுவதும் விவசாயிகள் போராட்டத்தை முன்னெடுத்தார்கள். அப்போதைய அரசாங்கம் போராட்டத்தை கட்டுப்படுத்துவதற்காக துப்பாக்கி சூடு நடத்த உத்தரவிட்டு 63 பேர் தமிழ்நாடு முழுவதும் காவல்துறையால் சுடப்பட்டார்கள். அதற்குப் பிறகு நடந்த பல்வேறு அரசியல் மாற்றங்களுக்குப் பிறகு விவசாயிகளுக்கு கட்டணமில்லா மின்சாரம் வழங்கப்பட்டது. தொடர்ந்து விவசாயிகள் கட்டணமில்லா மின்சாரத்தை பயன்படுத்தி விவ சாயத்தை செய்து வருகிறார்கள். இந்த வசதியால் மட்டும் தான் தமிழகத்தில் விவசாயம் தொடர்ந்து நடக் கின்றது. போராட்டத்தில் உயிர் நீத்த விவசாயிகளுக்கு தமிழ்நாடு முழுவதும் நினைவு தூண்கள் அமைத்து அந்தந்த பகுதி விவசாயிகள் வருடம் தோறும் அவர்கள் துப்பாக்கியால் சுடப்பட்ட நாளில் நினைவஞ்சலி செலுத்தி வருகிறார்கள்.

கடந்த காலங்களில் எங்களுடைய கோரிக்கைகளை ஏற்று உயிரிழந்த விவசாயி

கள் குடும்பத்தினருக்கு தலா 5 லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது. கடந்த பல வருடங்களாக தொடர்ந்து விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுக்க காரணமாக இருந்த, உயிர் நீத்த தியாகிகளுடைய குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை கொடுக்க வேண்டும் என்று அரசை வலியுறுத்தி வருகின்றோம். தமிழ் நாடு முழுவதும் விவசாயிகளுடைய வாழ்வாதாரத்திற்கு அடித்தளம் அமைத்து கொடுத்தவர்கள் அவர்கள். பல்வேறு அரசுகளிடம் கருணை அடிப்படையில் அரசு வேலை கோரிக்கை வைத்தும் அது நிறைவேறவில்லை.

தற்போதைய அரசு கரூரில் அரசியல் நிகழ்ச்சியில் உயிரிழந்த குடும்பங்களுக்கு கருணை அடிப்படையில் அரசு வேலை வழங்கியிருப்பதை பார்க்கின்றோம். அரசியல் நிகழ்ச்சியில் கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்களுக்கு கருணை அடிப்படையில் அரசு வேலை வழங்கலாம் என்றால் தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து விவசாயிகளின் குடும்பங்கள் வாழ்வதற்காக உயிர்த்தியாகம் செய்த தியாகிகளின் குடும்பங்களுக்கு கருணை அடிப்படையில் அரசு வேலை வழங்கக் கூடாதா? ஒவ்வொரு முறை மேடையில் பேசும்போதும் விவசாயிகளோடு உடனிருப்பேன் என்று பேசுகின்ற இன்றைய முதலமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசீலித்து விவசாய மின் கட்டண உயர்வுக்காக போராடி உயிர் நீத்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு கருணையோடு தகுதி அடிப்படையில் அரசு வேலை வழங்க முன்வர வேண்டும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

சிவகங்கை மாவட்டம்

திருப்பத்தூர் அருகே 13ம் நூற்றாண்டு கல்வெட்டு கண்டெடுப்பு!

திருப்பத்தூர், ஜூலை 13 -

திருப்பத்தூர் அருகே காரையூர் புதுவளவில் உள்ள வண்ணி கண்மாய் கரையில் இருந்த கல்வெட்டை சிவகங்கை தொல்நடைக்குழு நிறுவனர் புலவர் காளிராசா, செயலர் நரசிம்மன், காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரி வரலாற்று இணைப் பேராசிரியர் வேலாயுதராஜா ஆகியோர் ஆய்வு செய்தனர்.

2 அடி கொண்ட கல்வெட்டு!

பின்னர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: திருப்பத்தூர் அருகே கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு 2 அடி நீளம் கொண்டது. மொத்தம் ஏழு வரிகள் உள்ளன. நிறைவடையும் இடத்தில் ஒரு பூரண கும்பமும், அதன் இரு பக்கமும் குத்துவிளக்குகளும் காணப்படுகின்றன. எழுத்தமைதி மூலம் இக்கல்வெட்டு 13ம் நூற்றாண்டைச் சேர்ந்தது என அறிய முடிகிறது.

கல்வெட்டுச் செய்தி மூலம், வண்ணக்க நல்லூர் என்ற இப்பகுதியில் உள்ள குளக்கரையில் வாழ்ந்த சீயர் (வைணவ ஆச்சாரியார்) மக்களுக்கு நல்வாழ்வுக்கான வேத நெறியை கற்பித்து பாதுகாத்து வந்துள்ளார் என்பதை அறிய முடிகிறது.

மேலும், இப்பகுதியில் உள்ள அழகிய மணவாளப் பெருமாள் கோயிலில் முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன், சடையவர்மன் சுந்தர பாண்டியன் ஆகியோரது கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

அதிலும் வண்ணக்க நல்லூர் எனும் பெயர் இடம் பெற்றுள்ளது.

இரண்டு யானை வாகனங்கள்!

கல்வெட்டு கிடைத்த கண்மாயை வண்ணிக் கண்மாய் என்றும், அருகேயுள்ள அய்யனார் கோயில் வன்னிகுன்னி அய்யனார் என்றும் அழைக்கின்றனர். இதன் மூலம், இப்பகுதி வண்ணக்க நல்லூர் என்று அழைக்கப்பட்டிருப்பதை அறியலாம். தமிழகம் முழுவதும் கிராமங்களில் காவல் தெய்வமாக உள்ள அய்யனார், பூரணா, புஷ்பகலா ஆகிய தேவியருடனும் காட்சியளிப்பது வழக்கம். ஆனால், இங்குள்ள அய்யனார் தேவியர் இன்றி தனித்து உத்குடி ஆசனத்தில் (அமர்ந்த நிலை) கம்பீரமாக வீற்றிருக்கிறார்.

இரண்டு யானை வாகனங்கள் உள்ளன. அய்யனார் சிற்பத்தின் தலையில் ஜடாபாரம், நெற்றியில் கண்ணி மாலை, மார்பில் சன்னவீரம், காதுகளில் மகர குண்டலங்கள், மார்பில் உதரபந்தம் ஆகியவற்றுடன் வலது கையில் செண்டை ஏந்தியுள்ளார். இடது கரம் தண்ட ஹஸ்தத்தில் அமைந்துள்ளது. அய்யனார் சிற்பம் 12 அல்லது 13ம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக இருக்கலாம். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

கிருஷ்ணகிரி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்

ம.கமலநாதனின் மகன் ம.க.சேரலாதன் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

கிருஷ்ணகிரி, ஜூலை 13 -

கிருஷ்ணகிரி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மிசா. ம.கமலநாதன் அவர்களின் மகனும், அஞ்சூர் முன்னாள் பால்சொசைட்டி தலைவர், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் மற்றும் முன்னாள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் இயக்குனர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவருமான ம.க.சேரலாதன் (வயது 68) அவர்கள் (11.07.2026) அதிகாலை 04.35 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த ம.க.சேரலாதன் அவர்களுக்கு முனைவர் அ.திலகவதி (பேராசிரியர்) என்ற மனைவியும், Dr. S. கயல் விழி (MBBS.,M.D) என்ற மகளும், S.வீர பாண்டியனார் (BBA.,LL.B(Hons) வழக்கறிஞர்) என்ற மகனும் உள்ளனர்.

அன்னாரின் உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த நிலையில், பல்வேறு அரசியல் கட்சியினர், கூட்டுறவு சங்கப் பிரதிநிதிகள், முக்கியப் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர். அதைத்தொடர்ந்து, அன்னாரின் இறுதிச் சடங்குகள் (11.07.2026) மதியம் 3.00 மணியளவில் அவரது சொந்த ஊரான அஞ்சூர் கிராமத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

தேனாம்பேட்டையில் தடுப்புச்சுவர் இடிந்து விழுந்தது!

பெண் படுகாயம்!

சென்னை, ஜூலை 13 -

தேனாம்பேட்டை குடிசை மாற்று வாரிய குடியிருப்பில் பால்கனி தடுப்புச் சுவர் இடிந்து, மூன்றாவது மாடியில் இருந்து தவறி விழுந்து பெண் படுகாயம் அடைந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தேனாம்பேட்டை எஸ்.எம்.நகர் குடிசை மாற்று வாரிய குடியிருப்பில் வசித்து வருபவர் குப்பன். இவர் தனது மனைவி லட்சுமி, மகன், மகளுடன் வசித்து வருகிறார். குப்பன், லட்சுமி இருவரும் கூலி வேலை செய்து வருகின்றனர். 40 ஆண்டு பழமை வாய்ந்த இந்த குடியிருப்பின் கட்டிடங்கள் பழுதடைந்துள்ளது.

இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன் மூன்றாவது தளத்தின் பால்கனி சுவர் கட்டும் பணி நடைபெற்றுள்ளது.

சுவர் கட்டிய நபர்கள் தடுப்பு வேலிகள் எதுவும் அமைக்காமல் சென்றுள்ளனர். இந்த நிலையில் துணிகளை காய வைக்க வந்த லட்சுமி, பால்கனி அருகே சென்ற போது தடுப்புச் சுவரில் இரண்டு செங்கல் விழுந்துள்ளது.

இதையடுத்து கண்ணிமைக்கும் நேரத்தில் தடுப்புச்சுவர் இடிந்து, லட்சுமி மூன்றாவது தளத்திலிருந்து விழுந்துள்ளார்.

இதில் அவருக்கு தலை, கை, கால்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பலத்த காயம் ஏற்பட்டது. உயிருக்கு ஆபத்தான நிலையில் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் லட்சுமி தவறி விழுந்த நெஞ்சை பதை பதைக்க வைக்கும் சிசிடிவி காட்சிகள் தற்போது இணையதளத்தில் வைரலாக பரவி வருகிறது.

கட்டுமானப் பணிகள் குறித்து குடியிருப்பவர்களிடம் தகவல் தெரிவிக்கவில்லை, பாதுகாப்புக்காக தடுப்புகள் எதுவும் வைக்கவில்லை என்றும் தரமற்ற முறையில் கட்டுமானம் நடந்துள்ளதாக லட்சுமியின் உறவினர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக தேனாம்பேட்டை போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

சென்னை

காவாங்கரையில் இரும்பு தகடுகள் விழுந்து சிறுவன் பலி!

சென்னை, ஜூலை 13 -

சென்னையை அடுத்த புழல் அருகே காவாங்கரை பகுதியில், அலட்சியமாக நடந்த பாதாளச் சாக்கடை பணிகளால், தந்தையுடன் நடந்து சென்ற 3 வயது சிறுவன் மீது இரும்புத் தகடுகள் விழுந்து உயிரிழந்தான். எவ்வித பாதுகாப்பும் இன்றி ஜேசிபி மூலம் இரும்பு தகடு தூக்கப்பட, ரோப் அறுபட்டதால் சிறுவன் ஷாருக் ஈஸ்வரன் மீது தகடு பலமாக விழுந்தது. உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தான்.

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டம் பாம்புகோவில் சந்தையில் கொல்லம் முதல் தாம்பரம் வரை செல்லும் கொல்லம் விரைவு ரயில் நிற்க அனுமதி வழங்கியதை தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமாரி தலைமையில் பாம்புக் கோவில் சந்தையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.நிகழ்வில் மாவட்ட பொருளாளர் சரவணன் வழக்கறிஞர் சதீஷ்,நகர கலை இலக்கிய அணி அமைப்பாளர் டாக்டர் காவல்கிளி பாம்புகோவில்சந்தை கிளை செயலாளர் ஹைதர் அலி, பூவையா,கடற்கரை பாண்டியன், ஈஸ்வரன்,அப்பாஸ் மைதீன் காதர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தொடக்கம்

ஒரு
புத்தகத்திற்கு
பொருளடக்கம் போலத்தான்

ஒரு ஆட்சியின்
முதல்
இரண்டு
மாதங்கள்...

அப்படிப்
பார்த்தால்

வெள்ளை
அறிக்கை
புலம்பல்கள்..

ஆய்வு
நாடகங்கள்

பழி போடும்
படலங்கள்
ஆள் தூக்கும்
அலப்பறைகள்

அமைச்சர்களின்
அமெச்சூர்
தனங்கள்..

அருவருப்பான
மரபு
மீறல்கள்

அதே அதே
ரீல்ஸ்கள்

முகச்சுளிப்பு
முகஸ்துதிகள்.

ஆக
மொத்தத்தில்

புதுத் தொடப்பம்
நல்லா பெருக்கும்
என்பார்கள்..

அதுவும்
இல்லாத

தவெக
ஆட்சியின்
தொடக்கம்...

**என்னநாஞ்
சொல்றது**

மருது அழகுராஜ்
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்

திருவண்ணாமலை தூய்மை அருணை சார்பில்

மாதந்தோறும் கர்ப்பிணிப் பெண்களுக்கு வளைகாப்பு விழா!

வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்குமார் பரிசு பெட்டகங்கள் வழங்குகிறார்!

திருவண்ணாமலை, ஜூன் 13-

திருவண்ணாமலை தூய்மை அருணை அமைப்பு சார்பில், தூய்மைப்பணி மரம் நடுதல், நீர் நிலை பராமரித்தலோடும், மாதந்தோறும் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா நடத்தப்பட்டுவருகிறது. வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்குமார் அவர்கள் பரிசு பெட்டகங்கள் வழங்கி வாழ்த்துரை வழங்குகிறார்.

திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலுவை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 39 ஒருங்கிணைப்பாளர்களும், மாடவீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக் கணக்கானோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.

அதனை தொடர்ந்து மாதந்தோறும் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழாவை கடந்த ஜூலை மாதம் பொதுப்பணித்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

16.07.2026 வியாழக்கிழமை காலை 9.30மணிக்கு, திருவண்ணாமலை, காந்தி நகர் பைபாஸ் சாலையில் உள்ள நகர்ப்புற அருணை மருத்துவமனை வளாகத்தில், தூய்மை அருணை சார்பில், கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா நடைபெறவுள்ளது.

விழாவிற்கு அருணை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் குணசிங் தலைமை வகிக்கிறார்.

அருணை கல்விக்குழுமங்களின் துணைத் தலைவர் எ.வ.வே.குமரன், அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சி.இ.ஒ. பேராசிரியர் அசோக் தியாகராஜன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தூய்மை அருணை மேற்பார்வையாளர் டாக்டர் எ.வ.வே.கம்பன் அனைவரையும் வரவேற்புப் பேசுகிறார்.

விழாவில் கலந்து கொண்டு வந்தவாசி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் எஸ். அம்பேத்குமார் அவர்கள், கர்ப்பிணி பெண்களுக்கு பட்டுச்சேலை, இனிப்புகள், தின்பண்டங் கள் மற்றும் மங்கலப்பொருட்கள் அடங்கிய பெட்டகங்களை வழங்கி வாழ்த்திப் பேசுகிறார்.

மருத்துவ ஆலோசனைகளை, மகப்பேறு மருத்துவர் டாக்டர் கவிதா வழங்குகிறார்.

நிறைவாக தூய்மை அருணை மேற்பார்வையாளர் ப.கார்த்திவேல்மாறன் நன்றி கூறுகிறார்.

விழாவிற்கான ஏற்பாடுகளை மேற்பார்வையாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, இரா.ஸ்ரீதரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, பிரியா ப.விஜயரங்கன், இல.குணசேகரன் ஆகியோர் செய்து வருகின்றனர்.

புதுப்பிக்கப்பட்ட விழுப்புரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை, சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட கழக பொறுப்பாளருமான டாக்டர் இரா.இலட்சுமணன் திறந்து வைத்து, அறுசுவை உணவு பரிமாறினார். உடன் சட்டமன்ற உறுப்பினர் தி.கௌதம், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் இரா. ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், வழக்கறிஞர் இரா. கண்ணப்பன், எஸ்.வெற்றிவேல்,பா.தெய்வசிகாமணி, வி.ஜி.பிரபாகரன, தே.முருகவேல், பா.ஜீவா, கப்பூர் KNB.ராஜா, கொத்தமங்கலம் B.சந்திரசேகர், PKT.முரளி, மைதிலி ராஜேந்திரன், திருவக்கரை கோ.பாஸ்கர், கு.செல்வமணி, வே.கணேசன், சீனு.செல்வரங்கன், கிளியனூர் K.S.ராஜி, தலைமை கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ்.ஏ.சச்சிதானந்தம், N.பஞ்சநாதன், T.R.இளங்கோவன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.